நான் உயிரோடு இருக்கும்வரை
As Long as I Live I Will Praise the Lord
Album 36 Song 3
HOLY
BIBLE

Song 3 நான் உயிரோடு இருக்கும்வரை 146 சங்கீதம்

Psalm 146 declares that we should praise the Lord as long as we live and put no trust in princes or human beings. It highlights God as Creator, Defender of the oppressed, Provider, and eternal King.

நான் உயிரோடு இருக்கும்வரை
கர்த்தரையே துதிப்பேன்
நான் உள்ளளவும் என் தேவனை
பாடிப்பாடிப் போற்றுவேன்

வானத்தையும் பூமியையும் உண்டாக்கியவர்
எப்பொழுதும் உண்மையைக் காக்கின்றவர்
ஒடுக்கப்பட்டவனுக்கு நியாயம் செய்கிறவர்
பசியாய் இருப்பவனுக்கு போஜனம் கொடுப்பவர்

கட்டுண்டவர்களை விடுதலையாக்குபவர்
குருடரின் கண்களை திறப்பவர்
மடங்கடிக்கப்பட்டவனைத் தூக்கிவிடுபவர்
நீதிமானை நேசிக்கின்றவர்

நான் உயிரோடு இருக்கும்வரை
கர்த்தரையே துதிப்பேன்

நான் உள்ளளவும் என் தேவனை
பாடிப்பாடிப் போற்றுவேன்

பரதேசிகளை காப்பாற்றுபவர்
திக்கற்ற பிள்ளைகளை ஆதரிப்பவர்
துன்மார்க்கரின் வழியை கவிழ்த்துப்போடுபவர்
என்றென்றும் அவரே அரசாளுபவர்

விதவைகளை ஆதரிப்பவர்
சந்ததிதோறும் ராஜரிகம் பண்ணுபவர்
கர்த்தர்மேல் நம்பிக்கையாய் இருப்பவன் பாக்கியவான்
அல்லேலூயா என்றே ஆர்ப்பரிப்போமா?

நான் உயிரோடு இருக்கும்வரை
கர்த்தரையே துதிப்பேன்
நான் உள்ளளவும் என் தேவனை
பாடிப்பாடிப் போற்றுவேன்

பிரபுக்களை நீ நம்பாதே
மனுபுத்திரனையும் நீ நம்பாதே
இரட்சிக்கத் திராணியில்லா மனுஷனை நம்பாதே
ராஜாதி ராஜனாம் கர்த்தரையே நம்பியிரு

அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா அல்லேலூயா அல்லேலுயா
அல்லேலூயா அல்லேலுயா

நான் உயிரோடு இருக்கும்வரை

As Long as I Live
I Will Praise the Lord

Album 36 Song 3